## தலைநகரில் அடிக்கடி திடீர் வெள்ளம்:

# எஸ்ஓபி மறுஆய்வு செய்யப்படும்





கோலாலம்பூர், ஆக. 26-
தலைநகரில் அடிக்கடி திடீர் வெள்ளம் ஏற்பட்டு வருவதனால் அதனை எதிர்கொள்வதற்கான எஸ்ஓபி எனப்படும் நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறையை கோலாலம்பூர் மாநகர் மன்றம் மறுஆய்வு செய்யும் என கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார். இப்பிரச்சினையைச் சமாளிக்க வடிகால், நீர்ப்பாசனத்துறையிடம் அது ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் சொன்னார்.

இவ்விவகாரம் குறித்து தாம் கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ மைமுனா முகமட் ஷாரிஃப்பிடம் பேசியுள்ளதாகக் கூறிய அவர், தலைநகரில் அடிக்கடி திடீர் வெள்ளம் ஏற்படும் பகுதிகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அடையாளம் கண்டு வருவதாகவும் அவர் சொன்னார்.

கடந்த வியாழக்கிழமை தலைநகரிலுள்ள உலக வாணிப மையத்தில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது குறித்து விவரித்த அவர், அன்றைய தினம் கனத்த மழை பெய்ததைத் தொடர்ந்து அங்கு வெள்ளம் ஏற்பட்டதாகவும் அவர் சொன்னார்.

அன்றைய தினம் கோம்பாக் ஆற்றின் அருகில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த 50 கார்கள் உட்பட உலக வாணிப மையத்தின் கார் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல கார்கள் அரை மீட்டர் வரை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டன.

இதனிடையே, கடந்த வியாழக்கிழமை ஜாலான் கெந்திங் கிளாங், தாமான் பூங்கா ராயாவில் ஏற்பட்ட நிலச்சரிவு குறித்து விவரித்த அமைச்சர், அப்பகுதியில் நிலம் உறுதியாக இல்லாத காரணத்தாலே அங்கு நிலச்சரிவு ஏற்பட்டது என்றார். அதனை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அணுக்கமாகக் கண்காணித்து வரும் என்ற அவர், அங்கு அது சரியான நடவடிக்கையில் இறங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.